# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.97/2009

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நீலாவதி | மதம் | : இந்து |
| க/பெ | : பாஸ்கர் ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**27.10.2025**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் என்ன என்ன புல எண்கள் என்ன விஸ்தீரணம் என்ற விவரம் தெரியுமா என்றால் எவ்வளவு விஸ்தீரணம் என்பது தெரியாது. புல எண் மட்டும் தெரியும். புல எண்.267/10, 267/11, 267/12 ஆகும். நான் தற்போது சொல்லும் புல எண்கள் குறித்துதான் நான் உரிமை கோருகிறேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்து முதன்முதலில் யாருக்கு சொந்தமானது என்றால் சாலம்மாளுக்கு சொந்தமானது. அவர் சரோஜம்மாளுக்கு விற்று சரோஜம்மாளிடம் இருந்து நாங்கள் வாங்கியுள்ளோம். தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பாஸ்கர் ரெட்டி பெயரில் உள்ளது. வழக்கு சொத்திற்கு வரி யார் செலுத்துகிறார் என்றால் நான் செலுத்தி ரசீதை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

2. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு சம்மந்தப்படாத ஆவணங்கள் என்றாலும் அவை என்னால் தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள விக்கிரைய ஆவணங்கள் போலியானது என்று 15.12.2006ம் தேதியிட்ட உத்தரவில் வருவாய் கோட்டாட்சியர் குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்துள்ளார் என்றால் இல்லை. நாங்கள் பணம் கொடுத்துதான் வாங்கினோம். 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா போலியானது என்று ரத்து செய்து வாதி பெயரில் பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றால் பட்டா எங்கள்

பெயரில்தான் உள்ளது. நாங்கள்தான் வரி செலுத்துகிறோம். நான் தாக்கல் செய்துள்ள பட்டாவிற்கும் 06.09.1989ம் தேதியிட்ட பத்திரத்தில் கண்டுள்ள சொத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை. சரியாகதான் உள்ளது.

3. வாதியின் பாட்டி சாலம்மாள் அவர்களின் மாமனார் பொடமேகல குப்பய்யா என்பவர் வழக்கு சொத்து பட்டியலில் வரிசை எண்.8 முதல் 10 வரையிலான சொத்துக்களை லட்சுமண ரெட்டி என்பவரிடம் ரூ.200க்கு 17.03.1927ம் தேதியிட்ட விக்கிரைய பத்திரத்தின் மூலம் வாங்கினார் என்றால் எனக்கு அது தெரியாது. மற்றொரு உரிமையாளரான கோவிந்த செட்டியிடம் வரிசை எண்.8 முதல் 10 வரையிலான சொத்துக்களை ரூ.664க்கு 02.11.1928 தேதியிட்ட பத்திரத்தின் மூலம் வாங்கினார் என்றால் இல்லை. பொடமேகல குப்பய்யா என்பவரும் வசந்த கோவிந்த நாயுடு என்பவரும் வழக்கு வரிசை எண்.14ல் உள்ள கிணறை வெட்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது. பொடமேகல குப்பய்யாவிற்கு கிணறில் பாதி பாகம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. வழக்கு சொத்தின் வரிசை எண்.1 முதல் 7 வரையிலான சொத்துக்களை அதன் உரிமையாளரான செஞ்சையா செட்டி என்பவரிடம் ரூ.124க்கு 20.05.1937ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பொடமேகல குப்பய்யா வழக்கு சொத்து வரிசை எண்.11ஐ அதன் உரிமையாளரான தோட்ட கங்கையா என்பவரிடம் ரூ.90க்கு 09.06.1936ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் வரிசை எண்.12ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பொடமேகல குப்பய்யாவின் பூர்வீக சொத்துக்கள் என்றால் தெரியாது. பொடமேகல குப்பய்யாவிற்கு 2 மகன்கள் என்றால் தெரியாது. அதில் ஒருவரான பொடமேகல முனுசாமி சாலம்மாளின் கணவர் என்றால் தெரியாது. மற்றொரு மகனான வெங்கட்டய்யா 1948ல் இறந்துவிட்டார் என்றால் தெரியாது. அவரது மனைவி ராஜம்மாளும் இறந்துவிட்டார் என்றால் தெரியாது.

5. வழக்கு சொத்தின் உரிமையாளர் சாலம்மாள்தான் என்றால் சாலம்மாள்தான் சரோஜம்மாளுக்கு எழுதி கொடுத்துள்ளார். நான் சொல்வது தவறு என்றால் என்னிடம் ஆவணம் உள்ளது. வழக்கு சொத்தின் உரிமையாளரான சாலம்மாள் 12.10.2006ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் வாதிக்கு வழக்கு சொத்துக்களை கொடையாக கொடுத்துள்ளார் என்றால் போலி பத்திரம் ஆகும்.

வாதி வழக்கு சொத்துக்களை முழு உரிமையுடன் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. நாங்கள்தான் பயிர் செய்கிறோம். நாங்கள் பயிர் செய்வதை காட்ட அடங்கல் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் நாங்கள் வாங்கிதான் அனுபவிக்கிறோம். எங்கள் ஆவணங்கள் போலியானது என்றாலும் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. எனக்கு வழக்கு விவரமே தெரியாமல் என் கணவர் சொல்லியதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை. வாதி ரமேஷுக்கு சாதகமாக தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் இல்லை.

(மறு விசாரணை இல்லை)